[9th November 1966

Pond works

* 548 Q.—Sri S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of pond works sanctioned in Palayam Block in Vedasandur Constituency;

(*b*) the amount spent on the pond works; and

(*c*) the number of ponds which have been completed?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) குளம் குட்டை அமைக்கும் எட்டு வேலைத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(இ) 50,503 ரூபாய் (ஐம்பதாயிரத்து ஐநூற்று மூன்று ரூபாய் மட்டும்).

(உ) பணிகள் எட்டும் நடந்தேறி வருகின்றன. அவை இன்னும் முடிவடையவில்லை.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : தலைவர் அவர்களே, இந்த வேலை களெல்லாம் மூன்று வருஷ காலமாக முடிக்காமல் இருப்பதால்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். வேலைகளை உடனடியாக முடிக்க உடனே உத்தரவு இடுவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : விரைவாக முடிக்க தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பிரயாணப்படி

* 549 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

9-00 a.m.

(அ) உணவு உற்பத்தித் துறையில் பணிபுரியும் தலைமைக் கூலி, மேஸ்திரி ஆகியவர்களுக்கு பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) உணவு உற்பத்தி வட்டங்களில் பணிபுரியும் தலைமைக் கூலி, மேஸ்திரி ஆகியோருக்குப் பயணப்படி கொடுக்கப்படுவதில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, இந்த உணவு உற்பத்தி வட்டங்களில் பணிபுரியும், தலைமைக் கூலி, மேஸ்த்திரி முதலியவர்கள் தற்போது அடையும் பிரயாணப்படி போதவில்லை, மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்கிறார்கள். அவர்கள் அதிக தூரம் தாலுகாவில் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அதை உயர்த்த பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது டெம்பரரியாக நியமிக்கப்பட்ட மேஸ்திரி, தலைமைக் கூலி இவர்கள் பற்றியது. அவர்களுக்கு அதிக மாகக் கொடுப்பதற்கில்லை.

9th November 1966]

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, விவசாயத் துறை மேஸ்திரிகள் 30 ஆண்டு சர்வீஸ் போட்டும், அடிப்படைச் சம்பளம் தற்போது ப்யூன்களுக்குக் கொடுப்பதையும் விட மிகக் குறைவாக இருக்கிறது. தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்தை அனுசரித்து, அவர்களுடைய சம்பளத்தை ப்யூன்கள் சம்பள அளவிலாவது நிர்ணயிக்க, உயர்ந்த ஆவன செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது அந்தமாதிரி யோசனை சர்க்காருக்கு இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே. இந்த உணவு இலாகா ஆரம்பத்திலிருந்து உத்யோகத்தில் அமர்த்தப்பட்ட தலைமைக் கூலிகள், மேஸ்திரி இவர்களை இதுவரைக்கும் உத்யோகத்தில் நிச்சயமாக்காமல், டெம்பரரியாகவே வைத்திருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : உணவுத் திட்டத்தில் வேலை செய்பவர்கள் சில இடங்களில் தாற்காலிகமாக எடுக்கப்பட்டவர்கள். அவர்களை வேலை ஆனவுடன் அனுப்பிவிடுவார்கள். எங்கெல்லாம் நிரந்தரமாக்க முடியுமோ அங்கெல்லாம் அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

தூருவாரிகள்

*550 கேள்வி.—திரு. நா. இராசாங்கம் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூர் வட்டம் பெருமாள் ஏரி, தூர்வாரி மராமத்து செய்வதற்கு அண்மையில் புல்டோசர் வரவழைத்து வேலையைத் தொடங்காமலேயே வந்த புல்டோசரை அனுப்பிவிட்டது உண்மையா ?

(இ) மீண்டும் புல்டோசர் உதவியால் மராமத்து வேலை தொடங்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(உ) அப்படியானால், எப்போது வேலை தொடங்கும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1952-ம் ஆண்டில் தூருவாரி இயந்திரத்தின் (Bull dozer) உதவியுடன் தூருவார முயற்சி செய்யப்பட்டது. அந்த ஏரிப்படுகை சகதி நிறைந்திருந்ததால், இந்த இயந்திரத்தின் உதவியால் தூரு எடுக்க இயலவில்லை. எனவே சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை அதிகாரி அந்த தூருவாரி இயந்திரத்தைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

(இ) அத்தகைய செயற்குறிப்பு எதுவுமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. இராசாங்கம் : கனம் சபாநாயகர் அவர்களே, 10,000 ஏக்கரா சாகுபடிக்கு உபயோகமாகக் கூடிய பெருமாள் ஏரி நாளடைவில் குறைந்து இப்பொழுது 4,000 ஏக்கர் அளவிற்கு